

மதுரை கிழக்குத் தொகுதி திமுக சார்பில் இரண்டு நாட்கள் நடைபெற உள்ள ஜல்லிக்கட்டு விழா முன்னேற்பாடு பணிகளை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்தார். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் மற்றும் அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முட நீக்கியல் மருத்துவர்கள் சங்க 58வது மாநில மாநாடு புதுச்சேரி சங்கமித்ரா கன்வெர்ஷன் சென்ட்ரலில், 7.02.2025, வெள்ளிக்கிழமை, மாலை 6 மணி அளவில், மாநில தலைவர் டாக்டர் தீன்முகமது இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் திருநாராயணன் முன்னிலை வகித்தார். இதில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ,கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

# தமிழ்நாடு முட நீக்கியல் மருத்துவர்கள் சங்க 58 ஆவது மாநில மாநாடு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்து வாழ்த்துரை!

கடலூர், பிப்.10-

தமிழ்நாடு முட நீக்கியல் மருத்துவர்கள் சங்க 58 ஆவது மாநில மாநாடு, புதுச்சேரி சங்கமித்ரா கன்வெர்ஷன் சென்ட்ரலில், 7.02.2025, வெள்ளிக்கிழமை, மாலை 6 மணி அளவில், மாநில தலைவர் டாக்டர் தீன்முகமது இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் நாராயணன் முன்னிலை வகித்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் வரும் ஆண்டுசங்க தலைவர் டாக்டர் என்.மணிகண்டன்,

டி.என்.டி. சங்க நிகழ்ச்சிகள் தலைவர் பேராசிரியர் டாக்டர் ஆர்.நீலகிருஷ்ணன், செயலாளர் டாக்டர்எஸ்.நடராஜன், பொருளாளர் டாக்டர் ஏ.சரவணன், எம்ஜிஆர் பல்கலைகழக முன்னாள் துணைவேந்தர் மூத்த முட நீக்கியல் மருத்துவர் டாக்டர் மயில்வாகணன், விநாயக மிஷன் துணை வேந்தர் டாக்டர் கணேசன், ஓ.ஏ.எஸ்.ஐ. எஸ். தலைவர் டாக்டர் பி.என்.வாசுதேவன், செயலாளர் டாக்டர் ரோஷன்குமார், பிஓஏ சங்க தலைவர் டாக்டர் எம்.பிரகாஷ், செயலாளர் டாக்டர் கே.சரவணன், சோழமண்டல ஆர்த்தோ டாக்டர் சங்க தலைவர் டாக்டர். எஸ். இளங்கோவன், டி.என். ஓ.ஏ. செயின்டிபிக் சங்க தலைவர் டாக்டர் சந்தோஷ்குமார்,ஈசி நெம்பர் டாக்டர் பாலமுருகன்,

விழுப்புரம் வடக்கு மாவட்டதி.மு.க செயலாளர் டாக்டர் ப. சேகர், கழகமருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர் ஆர். லட்சுமணன் ,எம். எல் .ஏ., கழக தகவல் தொழில் நுட்பஅணி துணை செயலாளர் டாக்டர் கா.தருண், கடலூர் கிழக்கு மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ப.கமலக்கண்ணன், மூத்த முடநீக்கியல் மருத்துவர்கள்டாக்டர் ரமேஷ் பாபு, டாக்டர் பாரதிச்செல்வன், டாக்டர்கோவர்த்தனா, டாக்டர் பாண்டியன், டாக்டர் சிவசுப்பிர மணியம், டாக்டர் கார்த்திக்,

கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ். ராஜா, ஒன்றிய கழக செயலாளர் முத்து.பெருமாள், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர். பாலமுருகன் மற்றும் முடநீக்கியல் மருத்துவ சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதுரை கிழக்கு தொகுதி திமுக சார்பாக அலங்காநல்லூர்

# கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் இரண்டு நாட்கள் ஜல்லிக்கட்டு விழா!

## விழா முன்னேற்பாடுகளை ஆய்வு செய்த அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!

மதுரை, பிப். 9-

மதுரை கிழக்கு தொகுதி திமுக சார்பில் வருகிற 11 மற்றும் 12ஆம் தேதி இரண்டு நாட்கள் அலங்காநல்லூர் அருகே உள்ள கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கில் பிரம்மாண்டமான ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளதாக, விழா முன்னேற்பாடுகளை ஆய்வு செய்த பின் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஏறு தழுவுதல் எனும் ஜல்லிக்கட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஜல்லிக்கட்டு கலையரங்கம் அமைக்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் அமைக்கப்பட்டது.

இதனை கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து சிறப்பு செய்தார்.

இந்நிலையில் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி சார்பில் வருகிற பிப்ரவரி 11 மற்றும் 12 ஆகிய இரண்டு நாட்களிலும், சோழவந்தான் தொகுதி சார்பில் பிப்ரவரி 16ஆம் தேதியும் அதிவிமர்சையாக ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளது.

இதற்காக தொகுதி அளவில் உள்ள ஜல்லிக்கட்டு காளைகளுக்கு பதிவு மற்றும் அனுமதி வழங்குவது தொடர்பான முன்னேற்பாடு பணிகளும், கலையரங்கத்தில் ஜல்லிக்கட்டு விழா நடத்துவதற்கான முன்னேற்பாடு பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த பணிகளை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி. மூர்த்தி, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அதன்படி காளைகள் ஏற்றி வரும் வாகனங்களுக்கான பாதை மற்றும் பார்வையாளர் மாவட்டத்திற்கு செல்வதற்கு வழிகள் குறித்து பார்வையிட்டனர். மேலும் அரங்கில் காளைகள் நிறுத்தி வைக்கப்படும் இடத்தில் நிரந்தரமாக மின்விசிறிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதே போல் தற்காலிக குடிநீர் தொட்டிகள், உணவு உள்ளிட்டவைகள் வைப்பதற்கு தேவையான இட வசதிகள் அமைக்கப்பட்டு வருகிறது. அதே போல் பாரம்பரிய வாடிவாசல் இரண்டு அடுக்கு தடுப்பு வேலிகள் அமைப்பது உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

இவற்றையும் ஆய்வு செய்த அமைச்சர் பி. மூர்த்தி அதிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும் மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட மதுரை மேற்கு, வடக்கு ஒன்றியங்கள் மற்றும் திருப்பாலை, கண்ணநேந்தல், ஆனையூர் பகுதிகளுக்கென 11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை ஜல்லிக்கட்டு விழாவும், அதேபோன்று 12ஆம் தேதி புதன்கிழமை மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு ஒன்றியங்கள் மற்றும் வண்டியூர் பகுதிகளுக்கான ஜல்லிக்கட்டு விழா என தனித்தனியே நடைபெறுகிறது.

அதே போன்று 16ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சோழவந்தான் தொகுதிக்கு என பிரத்யோகமாக ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளது என மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்

அமைச்சர் ஆய்வின் போது ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், பால ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் முத்தையன், பேரூராட்சி தலைவர்கள் மு. பால் பாண்டியன், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், சுமதி பாண்டியராஜன், துணைத் தலைவர் சாமிநாதன், பேரூர் செயலாளர் ரகுபதி, மற்றும் திமுக நிர்வாகிகள் நடராஜன், அருண்குமார், தனுஷ்கோடி, மாவட்ட சுற்றுலாத்துறை அலுவலர் பாலமுருகன் மற்றும் பொதுப்பணி அதிகாரிகள் உடன் இருந்தனர்

### ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டனப் பொதுக்கூட்டம்!


## ரெ.மகேஷ் தலைமையில் மு.சண்முகம் எம்.பி. சிறப்புரையாற்றினார்!

குமரி, பிப். 10–

ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கிய திட்டங்கள் புறக்கணிப்பு, கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும் எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் (08.02.2025, சனிக்கிழமை) அன்று மாலை 5.00 மணிக்கு, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், வடசேரி, அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் வைத்து நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக தொ.மு.ச. பேரவை செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சண்முகம் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் ஆலங்குளம் மரியராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

பொதுக்கூட்டத்தில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் திரு.என். தில்லைசெல்வம், மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என். தாமரைபாரதி, தலைமை கழக வழக்கறிஞர் லிவிங்ஸ்டன் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், ஒன்றிய செயலாளர்கள் பாபு, செல்வன், பிராங்களின், சற்குருகண்ணன், லிவிங்ஸ்டன், சுரேந்திரகுமார், பி. எஸ்.பி.சந்திரா, சுந்தர்சிங், நகர செயலாளர் நாகூர்கான், பகுதி செயலாளர்கள் ஜவஹர், சேக்மீரான், துரை, ஜீவா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சதாசிவன், பார்த்தசாரதி, மாவட்ட தொமுச நிர்வாகி சிவன்பிள்ளை உட்பட மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் பலர் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நான்காம் ஆண்டு நினைவு நாள்



# இரா.விசுவநாதன்

முன்னாள் அவைத் தலைவர், 105 வது வட்டம் அண்ணாநகர் பகுதி – தி.மு.க

மறைந்த நாள்: 10.02.2021

**தந்தையே! தெரியுமா உனக்கு!**
**அன்று "O.K. O.K." தொலைக்காட்சியில்**
**திரையிடும் போதெலாம் பார்த்து மகிழ்ந்தாய்!**
**இன்று, இன்னும் அரைநூற்றாண்டிற்கு**
**கழகத்தை கொண்டு செல்லவிருக்கும்**
**பெரியாரின் பெயரனாய் வாள் சுழற்றும்**
**மாட்சியைக் கண்டால், கொண்டாடித் தீர்ப்பாய்!**
**என்றென்றும் தங்கள் வழியில்!**
**இருவண்ணக் கொடி நிழலில்!**


திருமதி.**கிருஷ்ணவேணி விசுவநாதன்**

**வி.நந்தகுமார்** பி.ஏ.,
**ந.கவிதா**
**ந.சூர்யா** பி.காம்.,எம்.பி.ஏ.,
**ந.மாதங்கி**

**வி.நன்மாறன்** பி.எஸ்சி.,பி.எல்.,
கூடுதல் அரசு வழக்குரைஞர், சென்னை உயர்நீதி மன்றம்
**ஆ.கலைமதி** பி.ஏ.,பிஎட்.,
**ந.க.இயல்** பி.எஸ்.சி.,
**ந.க.இசை**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ம.கி. அம்பிகாபதி
## பிப்ரவரி 10 (2004)



வடக்கு எல்லை போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் மகனான இவர், இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கினார்.

முப்பது ஆண்டுகள், அரக்கோணம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

"அரக்கோணம் என்றாலே அம்பிகாபதிதான். கழகத்தை ஆலமரமாய் வளர்த்தவர்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**